பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 06 திங்கட்கிழமை 24.10.2022 கதிர் 240

## நவம்பரில் மீண்டும் குறையும் எரிவாயு?



உலக சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, நவம்பர் முதல் வாரத்துக்குள் எரிவாயுவின் விலை மேலும் குறையும் ☞ 8

## இலங்கையிலிருந்து இன்றும் நால்வர் தமிழகத்தில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இன்றும் 4 பேர் அகதிகளாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

மன்னாரிலிருந்து படகுமூலம்தப்பிச்சென்றவர்கள் இந்தியாவின் ஆளுகையின் ☞ 2

## காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு முடிவின்றி எமக்குத் தீபாவளி இல்லை!

### வவுனியாவில் உறவுகள் கதறல்



(வவுனியா நிருபர்)

காணாமல்போன எமது பிள்ளைகளுக்கு முடிவின்றி எமக் குத் தீபாவளி இல்லை என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவி னர்கள் தெரி வித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்துக்கு அருகாமை ☞ 2

# ஆட்சியில் எவர் இருந்தாலும் எம்மை ஏமாற்றவே முடியாது



### ரணிலுக்குச் சம்பந்தன் எச்சரிக்கை

இலங்கையின் ஆட்சியில் எவர் இருந்தாலும் எம்மை இனிமேல் ஏமாற்றவே முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இன்றைய தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு அவர் கருத்துத் தெரிவிக்கையில், ☞ 8

## ஓராண்டுக்குள் அரசியல் தீர்வு

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே எனது நோக்கம்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் தற்போது நாட்டின் தலைவர். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்க முடியாது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டே ☞ 2

## பிரிவினையின்றி சகலரும் ஓரணியில் பயணிப்போம்!

### தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தினேஷ்



தீமை என்னும் இருளை அகற்றி நன்மை என்னும் ஒளியை சமூகத்தில் பரப்புவதை மையப் பொருளாகக் கொண்டு, உலகம் முழுவதும் வாழ் இந்துக்கள் தீபங்களை ஏற்றி, எங்கும் ஒளி பரப்பி, ☞ 2

## யாழ். பல்கலையில் பகிடிவதை; மாணவர்கள் 19 பேருக்குத் தடை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பகிடிவதை மற்றும் துன்புறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட 19 சிரேஷ்ட மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டு, பதிவுகள் இடம்பெற்றுள்ள நிலையில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்குட்படுத்திய சிரேஷ்ட மாணவர்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் ☞ 8

## கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலை நினைவேந்தல்!



(இ.கலை யமுதன்)

யாழ்ப் பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட படுகொலையின் 35 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று ☞ 8

## யானை முதுகில் 'மொட்டு' சவாரி

### மீண்டும் அன்னம் சின்னம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள முக்கிய சில புள்ளிகள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து புதியதொரு கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதற்கான பேச்சுகள் வெற்றியை நோக்கி ☞ 8

## ஹெரோய்னுக்கு அடிமையான யாழ். இளைஞர் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் உயிர் கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான இளைஞர் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். ☞ 8

## ஐஸ் போதைப்பொருளுடன் வயோதிபர் மடக்கிப் பிடிப்பு

### அட்டாளைச்சேனையில் எஸ்.ரி.எவ். அதிரடி

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று மாலை அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ☞ 8

## இலங்கையிலிருந்து.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரத்தில் இன்று அதிகாலை தரை இறக்கி விடப்பட்டனர்.

அவர்களை அவதானித்த தமிழகப் மீனவர்கள் மறாயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடத்துக்குச் சென்ற பொலிஸார், நால்வரையும் மீட்டு இராமேஸ்வரத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவர்கள் தற்போது பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர். நால்வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், திருகோணமலை மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## காணாமல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் தீபாவளித் திருநாளான இன்று, தமது பிள்ளைகளும், உறவுகளும் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கானநீதிகோரிகவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நமது சைவ மதத்தில், அரக்கன் நரகாசுரனை வென்றமைக்கவே தீபாவளி கொண்டாடப்படுகின்றது. ஆனால், உண்மையில் கடந்த காலத் தில் தமிழர்களைக் கொன்ற அரக்கர்கள் இறந்த இந்த நாளை நாம் கொண் டாடுகின்றோம். அவர்களில் சிலரை நாம் பட்டியலிடலாம்.

நமக்குச் சுதந்திரம் கிடைத்ததும், நாம் அனைவரும் இந்தத் தீயவர்கள் ட்டியலை உருவாக்குவோம் .

வருங்காலத்தில், தமிழர்களைக் கொன்ற அரக்கர்களை, குறிப்பாக 2009ஆம் ஆண்டு அரக்கர்களையும் , நமது சுதந்திரப் போரை முறியடிக்க உதவிய தமிழ் அரக்கர்களையும் நினைவுகூரும் இந்த நாளைத் தமிழர்களாகியநாம்கொண்டாடுவோம்.

இந்த நாள் பேய்களை வென்றதைக் கொண்டாடும் நாள். தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஐ.நாவின் கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் மட்டுமே இந்த நாளை நாம் எதிர் காலத்தில் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாட முடியும் - என்றனர்.

## ஓராண்டுக்குள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக வேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் தீர்வு காண்பேன்.

இதற்கேற்றவாறு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அது விரைந்து நிறைவேற்றப்படும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே எனது நோக்கம்.

தமிழ் மக்களுக்கு மீள்குடியேற்றப் பிரச்சினை, காணிப் பிரச்சினை, காணாமல்போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சினை, அரசியல் தீர்வுப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் உண்டு.

எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

அந்தப் பணியைத் தற்போது ஆரம்பித்துள்ளேன். அதன் ஒரு கட்டமாக தண்டனை பெற்று சிறையில் இருந்த அரசியல் கைதிகள் சிலருக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளேன். என்னால் இயன்ற காரியங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பேன்.

அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும்.

இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியும் வருகின்றேன் - என்றார்.

## பிரிவினையின்றி.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபாவளிப் பண்டிகையை இன்று கொண்டாடுகின்றனர். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது இனிய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தீபாவளிப் பெருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

பிரிவினைக்கு ஆயிரம் காரணங்களை உருவாக்கினாலும், கட்சி, நிற, மத, இன பேதங்களை ஒதுக்கி, பொது அக்கறையுடன் செயற்பட வேண்டிய காலகட்டத்தை இன்று நாம் அடைந்துள்ளோம்.

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், தீபாவளியின் உண்மையான அர்த்தத்தை மனதில் இருத்தி, பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயற்பட்டு, இந்தச் சவாலான நேரத்தை எதிர்கொள்ள உறுதி எடுத்தல் வேண்டும்.

ஆன்மீக இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றி, தீமையை அழித்து நன்மை, அறியாமையிலிருந்து அறிவொளி என்பனவற்றைக் குறிக்கும் தீபாவளிப் பண்டிகையை அர்த்தமுள்ளதாக்கி, தனிமனித வெற்றியை விட பொதுவான ஆன்மீக முன்னேற்றத்தின் வெற்றியில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - என்றுள்ளது.

## யாழ்.பல்கலை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் இடம்பெற்ற விசாரணைகளின்போதுகுற்றம்நிரூபிக்கப்பட்ட கலைப்பீடத்தைச் சேர்ந்த 14 பேருக்கு ஆறு மாத கால வகுப்புத் தடையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 4 பேருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டு வருட கால வகுப்புத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதைக்கு எதிரான தண்டணைச் சாசனத்தின் படி, குற்றங்களின் தனமைக்கேற்ப விசாரணைக் குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைக் காலத்தை மாணவர் ஒழுக்காற்றுச் சபை சிபார்சு செய்தது. அந்தச் சிபார்சுகளுக்கமைய பேரவையால் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பேரவையின் தண்டனை குறித்த அறிவிப்பு அந்தந்த பீடாதிபதிகளின் ஊடாகத் துணைவேந்தரால் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனைக் காலத்தினுள் குறித்த மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள்ளும் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தண்டனைக்குட்படுத்தப் பட்ட மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பவராயின் விடுதியை விட்டு உடனடியாக வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்த மாண வர்களுக்கான வகுப்பு கள் நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் தேசபக்தர்கள்?

தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் அரசியல் தலைவர்களுக்கு தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஒரு பெயர் சூட்டி இருக்கின்றது. அது – 'பிரிவினைவாதிகள்'.

நாட்டின் அரசமைப்பில் பிரிவினைவாதம் தடுக்கப்பட்டு இருக்கின்றது என்றும், அந்த அரசமைப்புக்கு விசுவாசமாகச் செயல்படுவோம் என்று சத்தியப் பிரமாணம் எடுத்து, பதவியேற்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பின்னர் அரசமைப்புக்கு முரணாகப் பிரிவினைவாதப் போக்கில் செயற்படுகின்றார்கள் என்றும் அவர்கள் குற்றம் சுமத்துவது வழமை.

இந்தக் குற்றச்சாட்டை நோக்கும் போது 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்' – என்ற பேச்சு மொழிதான் நினைவுக்கு வருவதுண்டு.

நாட்டின் சட்டங்களில் மேன்மையானது அரசமைப்புச் சட்டம்தான். மீயுயர் சட்டம் அதுவே. மற்றைய சட்டங்கள் எல்லாம் அதன் கீழ் கட்டமைந்தவைதான்.

ஆனால், அந்த மீயுயர் சட்டத்தை மதிக்காமல் மிதிப்பவர்கள் முதலில் தென்னிலங்கை அரசியல் வாதிகள்தான். அவர்கள் மட்டுமல்லர், அந்த அரசமைப்புக்கு விசுவாசமாக – அந்த அரசமைப்பை பேணிப் பாதுகாப்போம் என்று – வாக்குறுதி அளித்து, பதவி ஏற்கும் அரசுத் தலைவர்களுந்தான்.

அந்த அரசமைப்பை மிதிப்பதில் முன்னணியில் இருப்பவர்கள் அதிகாரத்தில் இருக்கும் அரசு தலைவர்கள்தான் என்பது, இந்த நாட்டின் சீரழிவை அம்பலப்படுத்தும் உண்மை.

நாட்டின் மீயுயர் சட்டத்தில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று சொற்ப காலமல்ல, 35 வருடங்களுக்கு மேலாகப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி, ஒற்றைக் காலில் நின்று மறுத்து வருகின்ற அரசு தலைவர்களும் அரசுகளும்தான் இந்த நாட்டின் தேச பக்தி மிக்க பெரியோர்களாம்(?).

உண்மையில் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை மதித்துச் செயற்பட முடியாதவர்கள் – அரசமைப்புச் சட்ட விதிகளை ஏற்க மறுப்போர் – தேசபக்தர்கள் அல்லர். அவர்கள் தேச விரோதிகள். அந்த வகையில் இதுவரை காலமும் – கடந்த 35 ஆண்டுகளாக – அதிகாரத்தில் இருந்த, இப்போது இருக்கின்ற – அரசுகளும் அரசுத் தலைவர்களும் தேச விரோதி வகையறாக்கள்தான்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கான தெளிவான ஏற்பாடுகள் அரசமைப்பில் உண்டு.

ஆனால், அரசமைப்புச் சட்டத்தில் அந்த சரத்துக்களை – ஏற்பாடுகளை – அப்படியே சட்டப் புத்தகத்தில் வைத்துக் கொண்டுதான், அதை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று கூறி, அதற்கு எதிரான முறையில் – அரசமைப்பு விரோதப் போக்கில் – செயற்படுகின்றன சிங்கள அரசுகள்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தப்படியான காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிரக் கூடாது என்று வெளிப்படையாக பேசி, அரசியல் செய்யும் சரத் வீரசேகரா போன்றோர் தங்களை தேச பக்தர்களாகவும், அரசமைப்புப் படியான மாகாண அதிகாரங்களைப் பகிர வலியுறுத்துவோரை 'பிரிவினைவாதிகள்', 'தேசவிரோதிகள்' எனவும் விமர்சிப்பது அபத்தத்திலும் அபத்தம்.

# பல்கலைக்கழகமும் சமூகமும் நெருங்கிச் செயற்பட வேண்டும்

## உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் வலியுறுத்து



(நூருல் ஹுதா உமர்)

மூதூர் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகத்தினர், தங்களது 60 வருடம் பழமையான அரபிக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மூன்று மாடி கட்டடத்தில் நவீன நூலகம் ஒன்றை அமைப்பது பற்றி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் உபவேந்தர் அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் சார்பாக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீன், சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி. எம்.அஸ்வர், கலாநிதி எம்.எம் மஷ்ரூபா, ஏ.எம்.நஹ்பீஸ், எஸ்.எல்.எம்.சஜீர் ஆகியோரும் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகத்தினரும் கலந்து கொண்டனர். இதன் மூலம் இருதரப்புக் கலந்துரையாடல்களில் இப்பிரதேசத்திலுள்ள அரபிக்கல்லூரி நூலகங்களை மேம்படுத்துவதற்கு வதிவிடபயிற்சி பட்டறையொன்று அவசியம் என பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுத்தீன் அவர்களால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது தென்கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் தனது கருத்தை தெரிவிக்கையில் – பல்கலைக்கழகம் சமூகத்தை நோக்கி செல்ல வேண்டும் சமூகம் பல்கலைக்கழகத்தை நோக்கி வரவேண்டும் அப்போதுதான் தமது சமூகப் பங்களிப்பினை நிறைவேற்றிக்கொள்வதற்கு இச்செயற்றிட்டம் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும், இத்திட்டம் மிகவும் திறம்பட இயங்குவதற்கு தன்னாலான முழு ஒத்துழைப்பையும், இடவசதிகளையும் மற்றும் வளவாளர்களையும் வழங்குவார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இக் கலந்துரையாடல் முடிவில் குறித்த இப்பயிற்சிக்கான முன்னெடுப்புகளை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கும் இச்செயற்றிட்டத்தை தாங்களே செய்வதற்கும் நத்வதுல் உலமா அரபிக்கல்லூரியின் நிருவாகக் குழுவினர் ஏற்றுக் கொண்டனர். அதேவேளை நூலக மற்றும் பயிற்சி பட்ட றையின் குறிக்கோள்கள், எதிர்பாக்கப்படும் அடைவுகள், இலக்குகளையும் நிருவாகக் குழுவினர் மற்றும் குறித்த திட்டத்தின் நிலைபேறான தன்மை போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன..



# பெரமுனவுடனான உறவுகள் தொடர்ந்தும் நீடிக்குமாம்!

## சீன தூதரகம் திட்டவட்டம்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கு ஆர்வம் கொண்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சீனத் தூதரகம் வெளியிட்ட ருவிட்டர் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன கம்யுனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக ஜி ஜின்பிங் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதை தொடர்ந்தே சீனத் தூதரகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.


# மின்சார சபையின் மறுசீரமைப்பு முன்மொழிவுகள் அமைச்சரிடம்!

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான குழுவின் அறிக்கை கிடைத் துள்ளதாக மின்சக்தி அமைச்சு அறி வித்துள்ளது.

மேற்படி அறிக்கை ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்த யோசனைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார். மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக 8 பேர் கொண்ட இந்தக் குழு கடந்த ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

# 3 ஆவது முறையாக சீன அதிபரானார் ஜின்பிங் பலநாட்டுத் தலைவர்களும் அவருக்கு வாழ்த்து!



பீஜிங், ஒக்.24

சீன அதிபராக கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஷீ ஜின்பிங் 3ஆவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒருவார கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் நடந்த இரகசிய வாக்கெடுப்பின் பின்னர் மீண்டும் பொதுச்செயலாளராக அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய மாநாடு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும். இதில் கட்சியின் பொதுச்செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவரே நாட்டின் அதிபராக இருப்பார். இம்முறை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு கடந்த 16 ஆம் திகதி தலைநகர் பிஜீங்கில் ஆரம்பமாகியிருந்தது.

ஒரு வாரம் நடந்த இந்த மாநாடு நேற்று முடிவடைந்தது. இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்பட்ட இந்த தேர்வு முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதன்படி ஜின்பிங் மீண்டும் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இதன் மூலம் ஜின்பிங் 3 ஆவது முறையாக சீன அதிபராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர், கட்சியின் பொதுச் செயலாளராகவும், நாட்டின் அதிபராகவும் மேலும் 5 ஆண்டுகள் நீட்டிப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய மாவோவுக்கு பிறகு அதிக காலம் அதிபராக இருப்பவர் என்ற பெருமையை ஜின்பிங் பெறுகிறார்.

மேலும், சீனாவின் அதிபராக தெரிவுசெய்யப்பட்ட ஜின்பிங்க்கு ரஷ்ய அதிபர் புடின், அமெரிக்க அதிபர் பைடன் உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்களும் தமதுவாழ்த்துகளைத் தெரிவித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒரு லட்சம் தொன் விமான எரிபொருளுடன் உக்ரைன் களஞ்சியத்தை அழித்தது ரஷ்யா!



மாஸ்கோ,

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் பல மாதங்களாக தொடர்ந்து நீடித்து வருகிறது.

ரஷ்யஏவுகணைகள்உக்ரைன்மின்உற்பத்திநிலையங்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதன் காரணமாக உக்ரைனின் பெரும்பாலான பகுதிகள் மின் தடையால் இருளில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில், ஒரு லட்சம் தொன் விமான எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் ஒன்று அழிக்கப்பட்டதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், செர்காசி பகுதியில் உள்ள சிம்லா கிராமத்தில் உள்ள ஒரு எரிபொருள் களஞ்சியத்தில்உக்ரைன்விமானப்படைகளுக்குஉபயோகப்படுத்த ஒரு லட்சம் தொன்களுக்கும் அதிகமான விமான எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த எரிபொருள் கிடங்கு அழிக்கப்பட்டது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கார்க்குண்டுத் தாக்குதலில் சோமாலியாவில் 9பேர் பலி



கிஸ்மாயு, ஒக்.24

சோமாலியாவின் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்ட கார் குண்டுவெடிப்புத் தாக்குதலில் 9பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு அல்கொய்தாவுடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல்கொய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய அல்பாப் என்ற தீவிரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்தத் தீவிரவாத அமைப்பு சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட சோமாலிய அரசை கவிழ்க்க முயற்சித்து வருகிறது. அத்துடன் பொதுமக்கள், இராணுவத்தைக் குறிவைத்து அல்பாப் தீவிரவாத அமைப்பு அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தும் உள்ளனர்.

இந்த நிலையில், அந்நாட்டின் கிஸ்மாயு நகரில் உள்ள ஹோட்டலில் கார்க் குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதன்பின், ஹோட்டல் உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் 9 பேர் பலியாகியமையுடன், 47 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்துத் தகவலறிந்து அங்கு வந்த பாதுகாப்பு படையினர், பதில் தாக்குதல் நடத்தித் தீவிரவாதிகளைச் சுட்டுக்கொன்றனர்.

## போட்டியிலிருந்து விலகினார் போரிஸ் ஜான்சன் பிரதமராகத் தேர்வாகும் வாய்ப்பு ரிஷி சுனக்குக்கு



லண்டன், ஒக்.24

இங்கிலாந்து நாட்டில் உருவாகிய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடி போன்ற காரணங்களால் பிரதமர் லிஸ் டிரஸ் கடந்த 20 ஆம் திகதி தனது பதவியை ராஜினாமாச் செய்தமைய அடுத்து ஆளும் கொன்சர்வேடிவ் கட்சியின் புதியதலைவர் மற்றும் நாட்டின் புதிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

பிரதமர் பதவிக்கான போட்டியில் இங்கிலாந்து முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன், முன்னாள் நிதி மந்திரி ரிஷி சுனக் களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பரபரபான சூழ்நிலையில் போட்டியில் களமிறங்குகிறார் என ரிஷி சுனக் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பின் பின்னர், ரிஷி சுனக்கிற்கு கொன்சர்வேட்டிவ் கட்சியில் 142 எம்.பி.க்கள் ஆதரவளித்துள் ளனர்.

அதேவேளை, முன்னாள் பிரதமரான போரிஸ் ஜான்சனும் மீண்டும் பிரதமர் பதவிக்கான போட்டியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், இங்கிலாந்து பிரதமர் பதவிக்கு போட்டி யிடப்போவதில்லை என்று போரிஸ் ஜான்சன் இன்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

நூறுக்கும் மேற்பட்ட எம்.பி.க்களின் ஆதரவு உள்ளபோதும் பிரதமர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இங்கிலாந்து புதிய பிரதமராக ரிஷி சுனக் தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் இங்கிலாந்தின் நிதி அமைச்சராக செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உக்ரைன்மக்களின்வாழ்க்கை



கீவ்,ஒக்.24

ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதல்களால் உக்ரைனின் பல பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கின்ற காரணத்தினால் உக்ரைனின் பல பிரதேசங்களும் இருளில் மூழ்கியுள்ளன. மக்கள் மெழுகுவர்த்தியில் வாழும் நிலைமை பற்றிய படங்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் பல மாதங்களாக தொடர்ந்து நீடித்து வருகிறது. ரஷ்ய ஏவுகணைகள் உக்ரைன் மின் உற்பத்தி நிலையங்களைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தியதன் காரணமாக உக்ரைனின் பெரும்பாலான பகுதிகள் மின் தடையால் இருளில் மூழ்கியுள்ளன.

ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டு வரும் மக்களுக்கு மின் தடை மிகப்பெரிய மன உளைச்சலைத் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து, உக்ரைனியர்களின் மனங்களை மகிழ்விக்கும் விதமாகவும், அதே சமயம் மின் தடையை சமாளிக்கும் வகையிலும் உக்ரைனிய உணவகங்கள் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ரம்மியமாக இயங்கி வருகின்றன. அத்துடன் பொதுமக்கள் வீடுகளின் வெளிச்சத்துக்காகவும், குழந்தைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்காகவும் மெழுகுவர்த்தியையே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனிலுள்ள இந்திய மாணவர்கள் வெளியேற 5 வழித்தடங்களை அறிவித்தது இந்தியத் தூதரகம்



புதுடெல்லி, ஒக்.24

உக்ரைனில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருகின்றமையால் உக்ரைனில் உள்ள மாணவர்கள் உள்பட இந்தியக் குடிமக்கள் விரைவில் உக்ரைனை விட்டு வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என இந்திய தூதரகம் கடந்த வாரம் அறிவித்திருந்தது. இந்த நிலையில், உக்ரைனில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக வெளியேறி உக்ரைன் எல்லையை கடக்க ஐந்து வழித்தடங்களை இந்தியத் தூதரகம் பகிர்ந்துள்ளது. இந்தியக் குடிமக்கள் உக்ரைன் எல்லையை கடக்க, பின்வரும் ஆவணங்களை வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கடவுச்சீட்டு, உக்ரேனிய குடியுரிமை அனுமதி, மாணவர் அட்டை அல்லது மாணவர் சான்றிதழ் மற்றும் விமான டிக்கெட் ஆகியவற்றை கொண்டு செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

உக்ரைன்-ஹங்கேரி எல்லை, உக்ரைன்-ஸ்லோவாக்கியா எல்லை, உக்ரைன்-மால்டோவா எல்லை, உக்ரைன்-போலந்து எல்லை மற்றும் உக்ரைன்-ருமேனியா எல்லை ஆகிய வழிகளில் உக்ரைனில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக உக்ரைனில் இருந்து வெளியேறுமாறு இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த எல்லைப் பகுதிகளில் உள்ள அனைத்து சோதனைச் சாவடிகளின் பெயர்கள் மற்றும் இருப்பிடங்களையும், மேற்கூறிய நாடுகளின் தூதரகங்களின் தொடர்பு எண்களையும் இந்தியத் தூதரகம் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தீபாவளியினால் காற்று மாசு டெல்லியில் மிக அதிகரிப்பு

### பட்டாசுகளுக்குத் தடைவிதித்தும் இந்த நிலை



புதுடெல்லி, ஒக்.24

டெல்லியில் காற்று மாசுபாட்டை குறைக்க பல நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்ற நிலையில், இதன் ஒரு பகுதியாக பட்டாசு உற்பத்தி, விற்பனை மற்றும் வெடிப்பதற்கு இந்த ஆண்டு டெல்லி அரசு தடை விதித்திருந்தது. மேலும், இந்த தடையை மீறுபவர்களுக்கு அபராதமும், சிறை தண்டனையும் கூட விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு நடவடிக்கைகளுக்கு பின்னரும், டெல்லியில் உள்ள மக்கள் இன்று காலை எழுந்ததும், புகையும், பனியும் படர்ந்த காற்று மாசுபாட்டுடன் கூடிய நகரையே பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த டெல்லியில், காற்று தர குறியீடு 276 என்ற அளவிலேயே இன்று உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில், டெல்லி பல்கலைக்கழக பகுதிகள் மற்றும் லோதி சாலை பகுதிகள் மிக மோசம் என்ற அளவில் முறையே 319 மற்றும் 314 என காணப்பட்டுள்ளன.

மேலும்,மதுரா சாலை மற்றும் டெல்லி விமான நிலைய சுற்றுவட்டார பகுதிகள் முறையே 290 மற்றும் 245 என்ற அளவில் மோசமடைந்து உள்ளன. இந்த மாசுபாட்டுக்கு பட்டாசுப் புகை மட்டுமன்றி டெல்லியை சுற்றிய பஞ்சாப், உத்தர பிரதேசம், அரியானா மற்றும் ராஜஸ்தானில் வேளாண் கழிவுகளைத் தீ வைத்து எரிப்பதும் காற்று தர குறியீடு மோசமடைந்து காணப்படுவதற்கான காரணிகளாக குறிப்பிடப்படுகின்றன.

## தரம் குறைவு, விலை அதிகம் என வாதிட்டவர் மீது கொதி எண்ணையை ஊற்றிய கடை உரிமையாளர்



ஜஜ்பூர், ஒக்.24.

தான் உட்கொண்ட உணவினுடைய தரம் குறைவாக இருந்தமையாலும், உணவினுடைய விலை அதிகமாக இருந்தமையாலும் அது தொடர்பில் உணவக உரிமையாளரிடம் கேள்வி கேட்ட வாடிக்கையாளர் மீது கொதி எண்ணெய் ஊற்றப்பட்ட சம்பவம் ஒடிசாவில் இடம்பெற்றுள்ளது.

ஒடிசாவின் கட்டாக் நகரில் இருந்து 45 கி.மீ. வடகிழக்கே ஜஜ்பூர் மாவட்டத்தில் பாலிசந்திரப்பூர் கிராமத்தில், வசித்து வருகின்ற பிரசன்ஜித் பரீடா என்பவர் உள்ளூர் சந்தையில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சாப்பிட சென்றுள்ளார். ஆனால், அங்கு அவருக்கு வழங்கப்பட்ட உணவு சுவையாக இல்லை என உணவக உரிமையாளர் பிரவாகர் சாஹூ விடம் முறையிட்டுள்ளார்.

அதன்பின், சாப்பிட்டு முடித்த அவர், உணவின் விலை பற்றி உரிமையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

ஏற்கனவே, உணவு சரியில்லை என கூறியதற்காக ஆத்திரத்தில் இருந்த உரிமையாளர், மீண்டும் கோபமடைந்துள்ளார். இதனால், திடீரென கொதிக்கும் எண்ணெய்யை பரீடாவின் மீது ஊற்றியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பரீடாவின் முகம், கழுத்து, மார்பு, வயிறு மற்றும் கைகளில் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர் உடனடியாக கட்டாக்கில் உள்ள எஸ்.சி.பி. மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இதுபற்றி பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ரூ.15 கோடி பெறுமதியான போதைப் பொருள் மும்பை விமான நிலையத்தில் மடக்கப்பட்டது!

மும்பை விமான நிலையத்தில் வைத்து மருந்துக்காக பயன்படுத்தப்படும் மாத்திரை வடிவிலான- 15கோடி ரூபாவுக்கு க்கு மேல் பெறுமதியான - போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கூரியர் பார்சல் மூலம் இந்தியாவிற்குள் போதைப் பொருள்கள் கடத்தப்பட வாய்ப்புள்ளது என்று கூறிய உளவுத்துறையின் அறிவிப்பின் படி, மும்பை வருவாய்ப் புலனாய்வு அதிகாரிகள், மும்பை சரக்கு விமான நிலைய வளாகத்தில் இருந்த ஒரு பார்சலை தடுத்து நிறுத்தினர். இந்த பார்சல் பாரிசில் இருந்து மும்பையின் புறநகரில் உள்ள நலசோபராவில் உள்ள ஒரு முகவரிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அந்தப் பார்சலை முழுமையாகச் சோதனை செய்ததில், சட்டவிரோதமான சர்வதேச சந்தையில் ரூ. 15 கோடிக்கு மேல் மதிப்புள்ள மாத்திரை வடிவில் இருந்த 1.9 கிலோ ஆம்பெட்டமைன் ரகப் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து அந்த பார்சலை டெலிவரி செய்தபோது பார்சலைப் பெற வந்த நபர் கைது செய்யப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணைகளில் இரண்டாவது நபர் கைதுசெய்யப்பட்டார். இரண்டாவது நபரிடம் விசாரணை நடத்தியபோது, பார்சலை பெற வந்த கடைசி நபரான நைஜீரியாவைச் சேர்ந்த நபரும் கைதுசெய்யப்பட்டார். இவ்வழக்கில் இதுவரை நைஜீரிய பிரஜை உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வழக்கில் மேலும் விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.






# தகைமையாளர்களைப் பாராட்டி 'மாளிகை மரகதங்கள்' கௌரவம்

(எம்.என்.எம். அப்ராஸ், ஐ.எல்.எம். நாஸிம்)

மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து பல்கலைக் கழத்திற்கு மாவட்ட அளவில் முதலிடம் பெற்று தெரிவானோர் அடங்களாக பலதுறைகளில் பிரகாசித் தவர்களை பாராட்டி கௌரவிக்கும் 'மாளிகை மரகதங்கள் -2022'நிகழ்வு அல்- மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அல்–ஹுசைன் பழைய மாணவர்களின் ஒருங்கமைப்பில் கிழக்கு மாகாண கணனிதொழில்நுட்பபேரவைபணிப்பாளரும், அல்– மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்காவின் தவிசாளரு மான யூ.எல்.என். ஹுதா உமரின் தலைமையில் மாளி கைக்காடு அல்– ஹுசைன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் விமர்சையாக நேற்று இடம்பெற்றது.

சாதனையாளர்களும், அதிதிகளும் கலாச்சார அம்சங்களுடனான முறையில் வரவேற்கப்பட்டனர். இடம்பெற்ற இந்நிகழ்வில் மெட்ரோ பொலிட்டன் கல் லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதான அதிதியாகவும், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் முன்னிலை அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மேலும் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம். அஸ்மீர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்களான ஜிஹானாஆலிப், நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் எஸ்.ரி.டி. பிரிவின் பொறுப்பு வைத்தி ய அதிகாரியுமான டாக்டர் தில்ஷான் நிஸாம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கல்முனை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதானிகள் அல்– மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்காவின் நிறை வேற்றுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அல்– ஹுசைன் பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கபில்வத்தை கங்கையில் இன்று மரகதலிங்கத்திற்கு அபிஷேகம்!

## நேரில் வந்த மயில் ஏற்றுக் கொண்டதாக ஐதீகம்





(காரைதீவு சகா)

தீபாவளியை முன்னிட்டு 'சித்தர்கள் குரல்' அமைப்பினர் மொனராகலையை அடுத்துள்ள அடர்ந்த கபிலவனத்தை ஊடறுத்து செல்கின்ற கபிலவத்தை கங்கையில், மரகதலிங்கத்திற்கு சிறப்பான அபிகேத்தை மேற்கொண்டனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங் குகர் ஜி தலைமையிலான குழுவினர் ஒருமணி நேரம் பால், பழம், தயிர், விபூதி, சந்தனம், குங்குமம் போன்ற திரவியங்களால் அபிகே வழிபாட்டில் ஈடுபட்டனர்.

'ஆதி கதிர்காமம்' என அழைக்கப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற கபிலவத்தையில், ப்தகன்னியர்கள் உறைந்த கபிலவத்தை கங்கையில் மரகதலிங்கத் திற்கு அபிஷேகம் நடைபெற்றது.

ஹரஹரமகாதேவா சம்போமஹாதேவா என்ற சுலோகம் விண்ணைத்தொடும் வண்ணம் பக்தர்கள் உரத்து ஒலி எழுப்பியபோது ,எங்கிருந்தோ பறந்து வந்த மயில் அபிகேம் இடம் பெற்ற சூழலில் வந்து நடந்து நடந்து ஆசீர்வதித்த வண்ணம் உலாவிக்கொண் டிருந்தது.

ஆஸ்தான இருந்து சிவங்கர் ஜீ கூறுகையில்..

என்னுடைய கடந்த பன்னிரண்டு வருட கால அனுபவத்தில் இப்படி மயில் நேரடியாக அபிகே நேரத்தில் வந்து ஆசீர்வதித்தது கிடையாது. எமது அபிகே வழிபாட்டை முருகப்பெருமான் ஏற்றுள்ளார் என்பதனை அவரது வாகனமான மயில் மூலம் சூட்சுமமாக உணர்த்தியுள்ளது. இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது என்றார்.

28 பேரடங்கிய குழுவினர் சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜியின் முறையான நெறிப்படுத்தலில் ஒவ்வொருவருக்கும் அபிகேம் இடம் பெற்றது. சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் ,நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் பங்களிப்பில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் பிரபல நாதஸ்வர வித்துவான் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பாலகுமாரன் , காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான தவிசாளரும் தர்ம கத்தாவுமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கல்வியியலாளர் வி.ரி.சகாதேவராஜா , திருகோணமலை பிரகாஷ் ஆசிரியர், கனடா அன்பர் குமார் உள்ளிட்ட பிரமுகர்களும் அபிகேத்தில் ஈடுபட்டனர். பங்கேற்ற பக்தர்களுக்கு இது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

# சிவபூமி நிலையம் கொழும்பில் திறப்பு!





கொழும்பு பம்பலப்பிட்டி கேக் வீதி இலக்கம் 34 இல் சிவபூமி நிலையம் கடந்த வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்டடத்தை அன்பளிப்பு செய்த திருமதி திரவியம் சபாரட்னம் கட்டட பிரதான வாயிலை திறந்து வைப்பதையும், பிரார்த்தனை மண்டபத்தை கம்பவாரதி இ.ஜெயராஜ் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும்,அருகில் சிவபூமி நிலையத்தின் பிரதம அறங்காவலர் கலாநிதி ஆறு.திருமுருகன், அமெரிக்க கவாய் ஆதீனம் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், வேதாந்த மடம் இளம் துறவி வேத வித்யாசாகர் சுவாமிகள், சின்மயா மிஷன் சுவாமி குணாதிதானந்தா சரஸ்வதி சுவாமிகள் அருகில் நிற்பதையும்,தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும்,கலந்து கொண்டவர்கள் பூஜை வழிபாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

## வவுனியா பொலிஸாரால் இரு இளைஞர்கள் கைது!

வவுனியா பொலிஸாரின் துரித நடவடிக்கையால் குற்றச் செயல் தொடர்பில் இரு இளைஞர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வைத்தியசாலைக்கு சென்ற பெண் ஒருவர் சிகிச்சை முடிந்தபின் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வீடு நோக்கி சென்ற போது பின் தொடர்ந்து சென்ற இரு இளைஞர்கள் வவுனியா, குடியிருப்பு பகுதியில் வைத்து அந்தப் பெண் மஞ்சள் நூலில் அணிந்திருந்த ஒரு பவுண் தாலியை அறுத்துச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில், வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் கியான் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் அகமட், பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்கா , விக்கிரமசூரிய , டிலீபன் , உபாலி பொலிஸ் கான்ஸ்டபிள்களான சங்கயரொகான், தயாளன் , திசாநாயக்கா ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனடிப்படையில் பூந்தோட்டம், மதீனாநகர் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 23 வயதுடைய இரு இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அறுத்துச் செல்லப்பட்ட தாலி அடைவுக் கடை ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (100)

## கள்ளக் கூட்டத்தின் நாடகமே 22 ஆவது அரசமைப்பு திருத்தம்!

### கஜேந்திரகுமார் எம்.பி. ஆக்ரோஷம்



புலம்பெயர் தமிழர்களை பாதிக்கும் 22 ஆவது திருத்தச் சட்டம் என்பது ஆட்சியில் உள்ளவர்கள் தம்மை ஜனநாயகவாதிகள் எனக் காட்ட எடுத்த ஒரு நாடகம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசம் எனப் பேசுகின்ற போது தாயகத்தில் இருக்கின்ற சனத்தொகையுடன், புலம்பெயர் தமிழர்களும் அதன் ஓர் அங்கம் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இரட்டை பிரஜாவுரிமை உடையவர்கள் நாட்டில் முக்கியமான பதவிகளுக்கு வருதைத் தடுக்கும் வகையில் அமைந்துள்ள இந்த திருத்தத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் –

போலக்ஸ்ரீ காரணத்தைக் காட்டி எவ்வித அங்கீகாரமும் இல்லாது, ஆட்சியில் உள்ள கள்ளக் கூட்டத்தால் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கம், சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கலாம் என்ற வாக்குறுதிகள் ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்படவில்லை என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சாவகச்சேரியில் காஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம்



சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை மதியம் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. வீட்டில் இருந்த பெண்மணி சமையல் செய்துகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் அடுப்பு சேதமடைந்ததுடன் வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

## மானிய விலையில் உரம் மற்றும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

### கந்தையா தியாகலிங்கம் கோரிக்கை



மரக்கறி செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு மானிய விலையில் உரம் மற்றும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை தலைவர் கந்தையா தியாகலிங்கம் கோரிக்கையை விடுத்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கருத்து தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் – மீனவர்களுக்கு ஓரளவுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ப... மண்ணெண்ணெயை பயன்படுத்த... விவசாயிகள் பலர் விவசாய... செய்கின்றார்கள்.

ஆனால் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை. விவசாயத்துக்குரிய... களை நாசினிகள் மற்றும் ம... ருந்துகள் தட்டுப்பாடாக இருப்பதுடன் விலை களும் அதிகரித்து காணப்படுகின்றது. நியாயமான விலையில் விவசாயத்துக்குரிய உள்ளீடுகளை அரசாங்கம் வழங்கவேண்டும் – என்றார்.

## 1,800 கோடி டொலர் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் வணிக பூங்கா

தெற்காசியாவின் முதலாவது டிஸ்னிலேண்ட் வணிக நோக்கு பூங்காவை அம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதற்கான பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாக சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1800 கோடி டொலர் முதலீட்டுக்கான ஆரம்பத்திட்டங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக இராஜாங்க அமைச்சர் அடுத்த மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

மேலும் நவம்பர் மாத இறுதியில் ஆய்வுகளை நடத்துவதற்கு டிஸ்னி நிறுவன முதலீட்டாளர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்தள விமான நிலையம் உள்ளிட்ட பிரதேசத்தில் உள்ள பாரிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு இவ்வாறான முதலீ... நன்மை பயக்கும் எனவும் இராஜாங்க அமைச்ச... குறிப்பிட்டுள்ளார்.

## யானை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்கின்றன எனவும், ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்கவின் மத்தியஸ்தத்துடனேயே பேச்சுகள் தொடர்கின்றன எனவும் சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த வருடம் ஆரம்பத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இந்தக் கூட்டணி போட்டியிடும் எனவும், 'அன்னம்' புதிய கூட்டணியின் சின்னமாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டி, கம்பஹா, காலி, பொலனறுவை, பதுளை, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மொட்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தக்கூட்டணியில் இணையவுள்ளனர்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய தூண்களில் ஒருவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், விரைவில் தீர்க்கமானதொரு அரசியல்முடிவொன்றைஎடுக்கவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

## ஐஸ் போதை.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்டாளைச்சேனை – ஆளங்குளம் வீதியில் வைத்து சந்தேகநபர், விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார். அட்டாளைச்சேனை - 5 பகுதியைச் சேர்ந்த 73 வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வசம் இருந்து 9 கிராம் 880மில்லிகிராம்ஐஸ்போதைப்பொருள் உட்பட அவர் பாவித்த கைத்தொலைபேசி என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், சான்றுப் பொருட்களுடன் அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கொக்குவில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. காங்கேசன்துறை வீதியிலுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

படுகொலையில் உயிரிழந்த வர்களின் உறவினர்களாலும், அப்பகுதி மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்காகச் சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபரில் இந்திய இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பல மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்தார்கள்.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ். நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொதுமக்கள் தங்கியிருந்த பாடசாலை கட்டடங்கள் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்வ தற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சியில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவருக்கும் எனது அன்பான இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். தீபாவளி தமிழ் மக்களுக்கு முக்கிய பண்டிகை நாள்.

தமிழர்களின் வாழ்வில் அமைதி ஏற்பட்டு மக்கள் முன்னேற்றகரமாக வாழக்கூடிய வகையில் இலங்கையில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமென இன்றைய நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தப் புதிய அரசமைப்பின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றோம்.

புதிய அரசமைப்பு ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றோம். வழமை போல் இலங்கை அரசு, இந்தக் கருமத்தைச் செய்யாமல் இழுத்தடிக்க முடியாது.

கடந்த காலக் கசப்பான சம்பவங்களால் நாங்கள் விரக்தி நிலையில் இருக்கின்றோம். எனவே, தீர்வு விடயத்தில் இலங்கை அரசு அசண்டையீனமாகச் செயற்பட்டால் தமிழ் மக்களின் நலன் கருதி நாங்கள் தீர்க்கமான முடிவை எடுப்போம்.

சர்வதேச சமூகத்தை இந்தக் கருமத்தில் நேரடியாகப் பங்கெடுக்கச் செய்து தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழிவகுக்குமாறு நாங்கள் கோருவோம். இலங்கையின் ஆட்சியில் எவர் இருந்தாலும் எம்மை இனிமேல் ஏமாற்றவே முடியாது – என்றார்.

## ஹெரோய்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தூர் மேற்கு, மருதடியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்வியில் திறமையாகத் திகழ்ந்த இவர், உயர்தரத்துக்குத் தெரிவான பின்னர் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியிலுள்ள பாடசாலையில் இணைந்துள்ளார். அங்கு உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்.

அதன் பின்னர் வீட்டிலுள்ள பொருள்களைத் திருடுவது உள்ளிட்ட குற்றங்களிலும் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, சீர்த்திருத்தப் பாடசாலையிலும் இளைஞர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் கடந்த ஒரு மாத காலமாக உயிர்கொல்லி ஹெரோய்னை நுகர முடியாமல் இருந்துள்ளார். இந்தநிலையில் நேற்று தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாதாந்தம் ஒருவராவது இவ்வாறு உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனையிலிருந்து மீள்வதற்கு முயற்சிப்பவர்கள் உரிய மருத்துவ ஆலோசனையுடனேயே அதனை முன்னெடுக்கவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## நவம்பரில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பு இருக்கின்றது என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையிலும் சந்தை நிலைமைக்கு ஏற்ப லிட்ரோவின் விலை குறைக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பெற்றகடன்களுக்காக லிட்ரோ எரிவாயு நிறுவனம் மேலும் 7.5 பில்லியன் ரூபாவை திறைசேரிக்கு மீளச் செலுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்டெம்பரில் லிட்ரோ நிறுவனம் 6.5 பில்லியன் ரூபாய்களைச் செலுத்தியுள்ளது.

இந்தநிலையில், ஒக்டோபர் மாதத்துக்குள் செலுத்த வேண்டிய 7.5 பில்லியன் ரூபாய்களே, கடந்த வெள்ளிக்கிழமை செலுத்தப்பட்டது எனவும் முதித்த பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாரித்து 24.10.2022இல் வெளியிடப்பெற்றது.